**இலங்கை கரப்பந்தாட்ட சம்மேளனம் - 2017 ஆம் ஆண்டு**

---

இலங்கை கரப்பந்தாட்ட சம்மேளத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான செலவினக் கணக்கு மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1993 இன் 47 ஆம் இலக்க விளையாட்டு (திருத்தப்பட்ட) அதிகாரச்சட்டத்தின் 9 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென கருதும் மீளாய்வாண்டின் சங்கத்தின் செயற்படுகள் தொடர்பான எனது அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான நிறைவேற்றுச் சபையின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு நிறைவேற்றுச் சபை பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சம்மேளனத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கிறாரேயன்றி சம்மேளத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவதத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை கரப்பந்தாட்ட சம்மேளனத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின்போது விளையாட்டுப்போட்டிகளுடன் தொடர்புடைய வெளிநாட்டு சுற்றுலாப்பிரயாணங்களுக்காக கரப்பந்தாட்ட சம்மேளனத்திற்கு விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தினால் ரூபா 6,260,000 கிரயமுடைய விமானப் பயணச்சீட்டுக்கள் வழங்கப்பட்டிருந்தபோதிலும், அவற்றின் பெறுமதி சம்மேளனத்தின் வருமானம் மற்றும் செலவில் கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் உதவியுடன் ஈரான் கரப்பந்தாட்ட சம்மேளனத்தின் வேண்டுகோளின் அடிப்படையில் இஸ்லாமிய குடியரசு ஈரான் வானொலியினூடாக (வலயமைப்பு - 3) 7 ஆவது ஆசிய இளைஞர் கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி 2008 இன் ஒளிபரப்பிற்காக ஈரான் கரப்பந்தாட்ட சம்மேளனத்திடமிருந்து இலங்கை கரப்பந்தாட்ட சம்மேளனம் பெறவேண்டிய ரூபா 2,300,000 தொகையொன்று நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கடந்த 04 வருடங்களாக காணப்படும் 09 பொது மற்றும் தனியார் கடன்கொடுத்தோர்களுக்கு செலுத்தவேண்டிய ரூபா 8,770,969 தொகையொன்றும் மற்றும் கடந்த 02 வருடங்களாக காணப்படும் ரூபா 25,000 அட்டுறு செலவின மீதிகளும் தீர்ப்பனவுசெய்யப்பட்டிராது தொடர்ந்தும் மீதிகீழ்க்கொண்டுவரப்பட்டிருந்தது.

(ஆ) 2016 ஆம் ஆண்டில் தாய்லாந்தில் நடாத்தப்பட்ட SAARC சுற்றுப்போட்டி பயிற்சி நோக்கங்களினை எதிர்கொள்வதற்காக ஒழுங்கமைப்புக்களினை மேற்கொண்டிருந்த தனியார் நிறுவகமொன்றிற்கு வழங்கப்பட்ட முற்பணத்தில், தீர்ப்பனவுசெய்யப்படாத ரூபா 43,050 மீதி 2017 திசெம்பர் 31 வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) 14 ஆவது கனிஷ்ட கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டிக்காக விளையாட்டுக்கள் அபிவிருத்தி திணைக்களத்திடமிருந்து 2014 இல் இருந்து பெறவேண்டியவையாக கணக்கிடப்பட்ட ரூபா 1,595,460 தொகை மீளாய்வாண்டுவரை அறவிடப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பில் விளையாட்டுக்கள் அபிவிருத்தி திணைக்களத்தின் கணக்குகளில் எவ்வித பதிவுகளும் காணப்படாமை, மேலும் அவதானிக்கப்பட்டது.

### 2.2.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

மாகாண கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டிகளின் செலவின பற்றுச்சீட்டுக்களின் தீர்ப்பனவுகளுக்காக 15 விளையாட்டு ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்ட, ரூபா 2,224,920 செலுத்துகைகளுக்கான செலவின விபரங்கள் மற்றும் பற்றுச்சீட்டுக்கள் உள்ளடங்கலாக அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலங்கை கரப்பந்தாட்ட சம்மேளனத்தின் தொழிற்பாடுகள் முன்னைய ஆண்டிற்கான ரூபா 8,715,285 மிகைக்கு எதிராக ரூபா 590,121 பற்றாக்குறைவொன்றை விளைவித்திருந்தமையால் நிதிசார் விளைவுகளில் ரூபா 9,305,406 ஆன பற்றாக்குறைவொன்றை சுட்டிக்காட்டுகின்றது. ரூபா 6,574,840 இனால் வருமானம் குறைவடைந்தமை மற்றும் ரூபா 2,214,613 இனால் நேரடிச் செலவினம் அதிகரித்தமை இந்தப் பற்றாக்குறைக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2.5 ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக பாதீடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. பாதீடு தயாரிக்கப்பட்டிருக்காமை கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2016 அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தபோதிலும், 2017 ஆம் ஆண்டிற்குக்கூட பாதீடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது சம்மேளனத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) பாதீட்டுக் கட்டுப்பாடு | சம்மேளனத்தின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு இயலக்கூடிய வகையில் பாதீட்டுக் கட்டுப்பாடொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்காமை. |

(ஆ) கணக்கீடு

விளையாட்டுக்கள் அபிவிருத்தி திணைக்களத்திடமிருந்து வெளிநாட்டு சுற்றுலாப் பிரயாணமொன்றிற்காகப் பெறப்பட்ட விமானபயணச் சீட்டுக்களின் பெறுமதி கணக்கிடப்பட்டிருக்கவில்லை.